PAFFREL

නිදහස් හා සාධාරණ මැතිවරණයන් සඳහා ජනතා ක්‍රියාකාරීත්වය.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.

PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS

பெவ்ரல் இயக்கத்தின் தேர்தல் தின அறிக்கை
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2011 மார்ச் 17

234 உள்ளூர் அதிகார சபைகளுக்காக நடாத்தப்பட்ட தேர்தல், பொதுவாக அமைதியான முறையில் இடம்பெற்றபோதும், முழுமையாக நோக்குமிடத்து குறிப்பாக தேர்தலுக்கு முந்திய கட்டத்திலும் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. முன்னைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு நிகராக, இம்முறையும் வாக்களிப்பு சதவீதம் 55-60% ஆக அமைந்தது. இம்முறை நடைபெற்ற தேர்தலில் 3022 தேர்தல் தொகுதிகளில் மொத்தம் 29,108 வேட்பாளர்கள் போட்டியிட்டதுடன், 9.4 மில்லியன் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

பெப்ரல் இயக்கம் 3,500 நிலைகொள் கண்காணிப்பாளர்களையும் 125 நடமாடும் குழுக்களையும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தியது. பெவ்ரல் இயக்கத்திற்கு 72 சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் உறுதிசெய்யப்பட்ட 6 பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் பற்றியும் தம்புள்ளை பகுதியில் இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பற்றியும் தகவல் கிடைத்தது. இதற்குப் புறம்பாக, அதிகாலை 3 மணியளவில் பொலனறுவை மாவட்டத்தின் மகுல்தமண வாக்கெடுப்பு நிலையத்தில் கைக்குண்டு வீச்சுச் சம்பவமொன்று இடம்பெற்றிருந்தது. பிரஸ்தாப சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்தார்.

தேர்தலுக்கு முந்திய கட்டத்தில் வன்செயல்கள் இடம்பெற்ற பிரதேசங்கள் என இனங்காணப்பட்ட பிரதேசங்களில் இன்றைய தினமும் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டதாகவும் வன்செயல்கள் இடம்பெற்றதாகவும் அறியக் கிடைத்தது. மாத்தறை, தங்காளை, பேருவளை, அக்கரைப்பற்று, களனி, பியகம, நாவலப்பிட்டி, தம்புள்ளை ஆகிய பிரதேசங்களிலிருந்து இத்தகைய சம்பவங்கள் பற்றி அறியக் கிடைத்தது. இதற்குப் புறம்பாக, சட்டவிரோதமான முறையில் வாக்காளர்கள் வாகனங்களில் அழைத்துச்செல்லப்பட்ட சம்பவங்கள் பற்றியும் எமக்கு அறியக் கிடைத்தது. புத்தளம் மாவட்டத்தின் கருவலகஸ்வெவ, ஆரச்சிகட்டுவ ஆகிய பிரதேச அதிகார பிரதேசங்களிலிருந்தும், மன்னார், மொணராகலை, முல்லைத்தீவு மற்றும் காலி மாவட்டத்தின் இமதுவ பிரதேச சபை அதிகார பிரதேசத்திலிருந்தும் இத்தகைய சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தன.

வேட்பாளர்கள் தேர்தல் சட்டதிட்டங்களைப் பாதுகாப்பது அல்லது தேர்தல்கள் ஆணையாளரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் குறித்து சட்டைசெய்யாமல் இயங்குவதும் சகல தேர்தல்களிலும் முக்கிய ஒரு பிரச்சினையாக விளங்குவதை பெவ்ரல் இயக்கம் அவதானித்தது. அரசாங்கத்தின் அடைவுகள் பற்றிய செய்திகளை தேர்தல் தினத்தில்கூட பக்கச்சார்பான முறையில் அரச ஊடகங்கள் பிரசாரம்செய்தமை பற்றிய முறைப்பாடுகள் பெவ்ரல் இயக்கத்திற்குக் கிடைத்தமை மற்றுமொரு முக்கிய பிரச்சினையாகும்.

சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்டத்தை வினைப்படுத்தக்கூடிய நிறுவனங்கள் மந்தகதியாக இயங்கியதையும் சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்படாததன் காரணமாக சட்டத்தை மீறுவோருக்கு தமக்கு வேண்டியவாறு இயங்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதையும் கவலைக்குரிய விடயங்களாகக் குறிப்பிடலாம்.

வாக்கெடுப்புப் பிரதேசங்களில் ஜனநாயக வழிமுறைக்கு மதிப்பளித்து வாக்களிப்பில் ஈடுபட்ட, ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அனைத்து வாக்காளர்களுக்கும் எமது கௌரவத்தைத் தெரிவிப்பதுடன், அது தொடர்பாக நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னேற்றப்பட வேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம்.

சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தபோதும், வேலைகொள்வோர் தமது ஊழியர்களுக்கு வாக்களிக்கச்செல்வதற்காக விடுமுறை அனுமதிக்காதநிலை தொடர்பாக பெவ்ரல் இயக்கத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்தன. தேர்தல் முறைமையில் மாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அதன் ஊடாக தேருநர் இடாப்பு இற்றைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாம் வலியுறுத்துகின்றோம். அநேகமான வேளைகளில், தேர்தல்கள் ஆணையாளர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும், அவருக்கு சட்டமுறையான அதிகாரம் இல்லாததன் காரணமாக அவற்றை அமுல்படுத்துவதில் குறைபாடுகள் இடம்பெறுகின்றமையால், பலம்பொருந்திய சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதிலுள்ள முக்கியத்துவத்தையும் நாம் பெரிதும் வலியுறுத்துகின்றோம்.

ரோஹண ஹெட்டிஆரச்சி
நிறைவேற்றுப் பணிப்பாளர்

12/3, Robert Terrace, Robert Gunawardana Mawatha, Colombo 6, Sri Lanka.
Tel : (+94) 11 2514441, 11 2514442 Fax : (+94) 11 2514443
E-mail : paffrel@sltnet.lk Website : www.paffrel.lk